# முடிவுரை

## ஆய்வின் பயன்பாடு

இறையன்புவின் படைப்புகளை ஆராய்ந்ததன் பயனாகச் சில முடிவுகளை அறிய முடிகிறது. இறையன்பு, தான் சமுதாயத்திற்குச் சொல்ல நினைக்கும் கருத்துகளை எழுத்துத் துறையைக் கருவியாக்கிக் கொண்டு அதன் வழியாக சொல்லிவருகின்றார். முதல் இயலான இறையன்புவின் வாழ்வும் படைப்பும் வழி, இறையன்புவின் பிறப்பு,இளமைப் பருவம், கல்வி, குடியுரிமைத் தேர்வு, ஆட்சிப்பணி, ஆய்வுப்பணி, இலக்கியப்பணி போன்றவற்றை அறியமுடிகிறது.

இறையன்பு 1963ஆம் ஆண்டு சேலத்துக்கு அருகில் உள்ள காட்டூர் என்கிற கிராமத்தில் திரு. வெங்கடாசலம் திருமதி பேபி சரோஜா தம்பதியினருக்கு நான்காவது மகனாகப் பிறந்தவர். சிறு வயது முதலே சுதந்திர உணர்வு மிக்கவராகவும் சமுதாய அக்கறை உடையவராகவும் இருந்து வந்தார்.கோவை வேளாண்மை பல்கலைக் கழகத்தில் படித்து இளம் அறிவியல் பட்டம் பெற்றார். வேளாண்துறையில் பணிபுரிந்துகொண்டே குடியுரிமைத் தேர்வு எழுதிய இறையன்பு, இரண்டாவது முறை குடியுரிமைத் தேர்வில் வெற்றி பெற்றார். அவர் உண்மை, உழைப்பு, நேரம் தவறாமை என்ற மூன்று கொள்கைகளுடன் கடமை தவறாது பணியாற்றி வருகின்றார்.

இறையன்பு, வேளாண்மையில் மட்டுமின்றி ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். வணிக நிர்வாகம், தொழிலாளர் நிர்வாகம், மனோதத்துவம் ஆகியவற்றில் முதுகலைப் பட்டம் பெற்றவர். “மனிதவள மேம்பாட்டில், திருவள்ளுவரும் ஷேக்ஸ்பியரும்” போன்ற தலைப்புகளில் முனைவர் பட்டம் பெற்றவர்.இப்படிப்புகள் அவரை மிகச்சிறந்த கல்வியாளராக மட்டுமின்றி நல்லதொரு மனிதராகவும் செயலாற்றலுடைய சிறந்த அதிகாரியாகவும் திகழ வழிவகுத்துள்ளது.

படைப்பு இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட இறையன்பு மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, புதினம் ,கட்டுரை என்று பலதளங்களிலும் எழுதியுள்ளார். இவரது படைப்புகள் அனைத்தும் இவரின் அனுபவ வெளிப்பாடுகளாகவும் சமுதாய அவலங்களை விமர்சிக்கும் போக்கு உடையனவாகவும் அமைந்துள்ளன என்பதை அறியமுடிகிறது.

இரண்டாவது இயலான இறையன்புவின் படைப்புகளில் சமுதாய நோக்கு வழி ஆயும்பொழுது, உள்ளன்போடு மக்கள் கூடி வாழும் அமைப்பே சமுதாயம்

என்றும் , வயதான காலத்தில் பிள்ளைகள் உறுதுணையாக இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில்தான் குடும்ப அமைப்பே ஏற்பட்டது என்பதையும் அறியமுடிகிறது.

திருமணம் அன்பின் அடிப்படையில் அமைய வேண்டும். திருமணம் எல்லாருக்கும் வரமாக அமைவதில்லை. கணவனும் மனைவியும் ஒருவர்க்கொருவர் புரிதலோடு வாழ்ந்தால் இல்லறம் நல்லறமாகும். உணவும் உடையும் மனிதனின் அடிப்படைத் தேவை. அனைவருக்கும் கல்வி இன்றியமையாதது. கல்வி வாழ்க்கைக் கல்வியாக இல்லாமல் வயிற்றுக் கல்வியாக மாறிவிட்டது. கல்வி நிறுவனங்கள் வர்த்தகத்தலங்களாக மாறிவிட்டன. சமுதாயத்தில் பெண்ணுக்குச் சம உரிமை அளிக்கப்பட்டது போல தோன்றினாலும் அவள் ஆணைச் சார்ந்தே வாழ்கின்றாள். திருமணங்களில் வரனுக்கன்றி மணப்பெண்ணுக்குப் பரிசத்தொகை வழங்கி மணம் முடிக்கும் வழக்கம் இருந்திருக்கின்றது. தன் வேலைத்திறனில் நம்பிக்கையற்றோரே உயிர்பலியிடுதல் போன்ற மூடநம்பிக்கையில் ஈடுபடுகின்றனர். இன்றும் சாதியின் பெயரால் மக்கள் வேற்றுமை படுத்தப்படுகின்றனர். மனிதனுக்குள் இருக்கும் இறைத்தன்மையை உணர்வதே ஆன்மீகம் போன்ற கருத்துக்களை இவ்வியலின் வழியாக அறியமுடிகிறது.

மூன்றாவது இயலான இறையன்புவின் படைப்புகளில் இயற்கையும் இறைமையும் வழி, இறைமை இட்ட கையொப்பமே இயற்கை என்றும், இயற்கையை மனிதன் எப்படிக் கட்டிக்காக்க வேண்டும் என்பதையும் இயற்கைக்கு ஊறுவிளைவித்தால், அதன் விளைவை மனிதன் சந்தித்தே தீரவேண்டும் என்பதையும் உணரமுடிகிறது. இயற்கை நமக்களித்திருக்கும் அருட்கொடைக்கு நன்றிக் கடனாக நாம் பூமியில் மரங்களை நடவேண்டும்.இயற்கை அளித்த செல்வங்களை முறையாகவும் சரியாகவும் அனுபவித்து இன்பம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது.

ஆன்மீகம் என்பது வாழ்க்கையை நுகர்வதற்கான பயிற்சி. நம்மிடம் இருக்கும் ஆன்ம சக்தியை உணர்ந்தால் இறைமையை உணர முடியும். கோவில் வழிபாட்டின் பிறப்பிடம். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே மெய்ஞ்ஞானத்தின் முதல் படி.இறைமையை அணுக மௌனமே சிறந்த வழி. உடலை நேசிப்பது இறைமையை நேசிப்பதின் அங்கம் போன்ற கருத்துக்களை அறியமுடிகிறது.

நான்காவது இயலான "இறையன்புவின் படைப்புகளின் வழிக் காணலாகும் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும் வழி, வாழ்க்கை எப்பொழுதும் சுகமாகவே இருந்து விடுவதில்லை. போராட்டங்களும் சிக்கல்களும் நிறைந்ததே வாழ்க்கை என்றும் சிக்கல்கள் எங்கிருக்கின்றதோ தீர்வுகளும் அங்கேயே இருக்கின்றன என்றும் அறியமுடிகிறது. சிக்கல்களைத் தனிமனிதச் சிக்கல், குடும்பச் சிக்கல், சமுதாயச் சிக்கல் என மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

தனிமனிதச் சிக்கல்களுக்கு அவரவரே காரணமாகின்றனர். பொதுவாக, சிக்கலுக்கான காரணிகள் பொறாமை, பேராசை, கோபம் இவை மூன்றுமே ஆகும். குடும்பச் சிக்கல்களுக்குக் கணவன் மனைவி மீதும், மனைவி கணவன் மீதும் உரிமை கொண்டாடுவதே அடிப்படைக் காரணம் என்றும் விட்டுக் கொடுத்தல், வேலைகளைப் பகிர்ந்து செய்தல், புரிதல் இவையே அச்சிக்கல்கள் தீர்வதற்கான வழிகளாகும்.

சமுதாயம் எதிர்கொள்ளும் சிக்கல்களில் முக்கியமானது வறுமை. வறுமை நீங்கி வளமை பூக்க உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவேண்டும். சமுதாயம் எதிர்கொண்டுள்ள அடுத்த சிக்கல் சாதி. சாதிச் சிக்கல் தீர கலப்பு மணம், காதல் மணம் வழி வகுத்தாலும் அது நிரந்தர தீர்வாகாது. இட ஒதுக்கீடு இதய ஒதுக்கீடாய் மாறும்பொழுதுதான் இச்சிக்கலுக்கு நிரந்தர தீர்வு கிட்டும். மதம், பக்தி சார்ந்த சிக்கலுக்கு மதத்தின் மீது கொண்ட மூர்க்கமே காரணம். மற்றவர் துன்பத்தை உணர்பவர்களே ஆத்திகர், அதை உணர முடியாதவர்கள் நாத்திகர்கள். பக்தி சுயநலமாக, நாடகமாகவே மாறிவிட்டது. பகுத்தறிவோடு செயல்படும் பொழுது நமக்குள் இருக்கும் கடவுட் தன்மை புலப்படும் போன்ற கருத்துகளை அறியமுடிகிறது.

ஐந்தாவது இயலான "இறையன்புவின் படைப்பாளுமை" வழி, சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடிய அணை கட்டுதல், கோவில் அமைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் பொழுது தொலைநோக்குப் பார்வையும் சுற்றுச்சூழல் சிந்தனையும் இன்றியமையாதது என்றும் , சொல்ல வரும் கருத்தை பிறர் மனங்கொள்ளும் வகையில் சொல்ல பல்வேறு உத்திகளைக் கையாள வேண்டும் என்றும் அறியமுடிகிறது.தன்னைச் சார்ந்தவர்களைத் தன் தொழில் ஆளுமையால் கவர்ந்தும், எழுத்து ஆளுமையால் வசப்படுத்தும் சக்தியும் கொண்ட இறையன்பு, அழிவல்ல ஆக்கமே ஹைக்கூவின் நோக்கம் என்பதை அழகான எடுத்துக்காட்டு மூலம் விளக்கியுள்ளார்.

ஒவ்வொரு படைப்பாளனும் அவனது மொழிநடையால்தான் தனித்துவம் பெறுகிறான். இறையன்பு இயற்கையையும் மக்கள் வாழ்வியலையும் பல்வேறு கண்ணோட்டத்தில்அணுகி,ஆராய்ந்து,அழகியல் உணர்வோடு படைப்புகளாக்கி உள்ளார். இறையன்பு ஆட்சிப் பணியில் இருப்பதாலும் பலதரப்பட்ட மனிதர்களைச் சந்திப்பதாலும் இவரின் சிந்தனை மக்களை மையப்படுத்தியே செல்கிறது. நகைச்சுவை வழியே சிந்தனையைத் தூண்ட"*அங்கத உத்தியைப்*" பயன் படுத்தும் இவர் தமது படைப்புகளில், உவமை, உருவகம், இயைபு, மோனை, எதுகை, சொல்லாட்சி, இணையெதிர் சொற்கள் போன்ற மேலும் பல கூறுகளும் அமைய இயற்றியுள்ளார். அவை இவரது மொழி ஆளுமையைப் பறைசாற்றுகின்றன.

**ஆய்வினின்று பெற்ற முடிவுகள்**

- குழந்தைத் தொழிலாளர்கள் உருவாக்கப்பட அவர்களின் பெற்றோரே காரணம். பிஞ்சு நெஞ்சங்கள் தன் குழந்தைப் பருவத்தைக் குதூகலமாய்க் கழிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும்.
- மரணம் முடிவல்ல, ஆரம்பம். மரணத்தை வெல்ல இறந்த பின்னும் வாழ்வாங்கு வாழ உடல் உறுப்புகளைத் தானம் செய்வதே சிறந்த வழி.
- சுயநலமாய்ச் சிந்திப்பதை விடுத்து துணிவுடனும் விழிப்புணர்வுடனும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- பிறரது முயற்சியால், குறுக்கு வழியில் முன்னேறுவதை விட திறமைகளை வளர்த்துக் கொண்டு இலக்கை நோக்கிப் பயணிப்பது பலன் தரும்.
- கல்வி மட்டுமே வாழ்க்கையல்ல. அறிவின் திறவுகோலான கல்வி, சுமையாக இல்லாமல் சுகமாக மாற வேண்டும்.
- கல்வி நிலையங்கள் வணிகத்தலங்களாக இல்லாமல் மாணவர், தம் திறமைகளை வளர்க்கும் கூடமாக மாற வேண்டும். கல்வியின் பலன் மேன்மையான மகிழ்ச்சியான வாழ்வை அடைவதே ஆகும்.
- குழந்தைகளுடன் பணத்தை மட்டுமே பகிர்ந்து கொள்ளாமல் பாசத்தையும் பகிர வேண்டும்.
- குடிமைப் பண்பு மிக்க நல்ல சமுதாயத்தை உருவாக்குவதே சமுதாயச் சிக்கலை எதிர்கொள்ளும் வழியாகும்.

- மதம், பக்தி சார்ந்த சிக்கலுக்கு மதத்தின் மீது கொண்ட வெறியே காரணம்.மதம் மார்க்கமாக அமையவேண்டும்.
- அதிகாரி-தொழிலாளி இடையேயான சிக்கல் நீங்க, அதிகாரிகள் திறமை மிக்கவர்களாகவும் தொழிலாளர்களின் உழைப்பை மதிப்பவராகவும் இருக்க வேண்டும்.
- சுற்றுப்புறத்தைத் தூய்மையாகவும் இயற்கையைப் பாதுகாக்கும் சிந்தனையோடும் பராமரித்தால் சுற்றுச்சூழல் மாசுபடாது.
- உலகின் அரணான வனங்கள் பேணிப் பாதுகாக்கப்படும்பொழுது இயற்கை தன் கருணையை மழையாய்ப் பொழியும்.
- இயற்கையோடு இயைந்து வாழும்பொழுது மனித வாழ்வு மேன்மையடையும்.
- கல்வியறிவு இல்லாத பெண்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். திருமணத்திற்குப் பிறகு பெண்களின் படிப்பு பாதியிலேயே நின்று விடுகிறது. திருமணம் எல்லா பெண்களுக்கும் சுகமாக அமைவதில்லை.
- போலியான புகழ்ச்சி வார்த்தைகளுக்கு மயங்காமல் தெளிவாக இருக்கும் பொழுதே பெண்களுக்கான விடுதலை சாத்தியமாகும்.
- கொள்கை பிடிப்புடன் உண்மையாய் இருப்பதன் மூலமே இன்றைய அரசியலில் தூய்மையை உண்டாக்க முடியும்.
- சிக்கலைக் கண்டு ஓடி ஒளியாத இளைய சமுதாயம் உருவாகும்பொழுதே ஒளிமயமான நாட்டை உருவாக்க முடியும்.
- ஒற்றுமையை உருக்குலைத்து வேற்றுமையை வளர்த்துவரும் சாதியத்தை அழிக்கும் பொழுதே வளர்ச்சியின் படிக்கட்டுகளில் நாம் காலெடுத்து வைக்க இயலும்.
- வறுமையை விரட்டியடிக்கும் பொழுதே ஒரு சராசரி இந்தியனுக்குப் போலித்

  தனமில்லாத இயல்பான வாழ்க்கை கிடைக்க வழி ஏற்படும்.
- நேர்மையாக நடந்து கொள்வது, உண்மையாக உழைப்பது, கருணையும் அன்பும் இயைந்த வாழ்வை மேற்கொள்வது, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த பொருள் ஈட்டுவது, ஒவ்வொரு நொடியையும் ஆக்கபூர்வமாய்ச் செலவிடுவது, விழிப்புணர்வுடன்

இயங்குவது போன்றவை இறையன்புவின் படைப்புகள் கற்றுக் கொடுக்கும் வாழ்வியல் நெறிகளாகும்.

- ❖ எந்த உயிரையும் காயப்படுத்திவிடக் கூடாது என்ற உணர்வைச் சுமந்து, அரிதாகப் புதைந்திக்கும் மனித உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக இவரது படைப்புகள் விளங்குகின்றன.

## ஆய்வாளரின் பரிந்துரை:

வெ.இறையன்புவின் படைப்புகளில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுக் களன்களாகக் கீழ்க்குறித்தவற்றைக் கொள்ளலாம்.

- ➢ இறையன்புவின் படைப்புகளில் காணலாகும் வாழ்வியல் உண்மைகள்
- ➢ தகவல் பெட்டகம் இறையன்பு
- ➢ இலக்கியமும் இறையன்புவும்
- ➢ இறையன்புவின் படைப்புகளில் காணலாகும் வரலாற்றுச் செய்திகள்